DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணி | Calling | |
| Father's Name | : பழனி | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 25-10-2025

**முதல் விசாரணை**

1. நான் சொரியன்கிணத்துப்பாளையத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன தங்கராஜ் என்னுடைய தம்பி. ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய மகள் பெயர் சிவன்மதி. என்னுடைய மகளை ராக்கி அழைத்து சென்று விட்டார். என்னுடைய மகளுக்கு அதற்கு முன்பே திருமணம் ஆகி இருந்தது. என்னுடைய மகளின் கணவர் பெயர் உதயகுமார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. என்னுடைய மகளை எதிரி அழைத்துச் சென்றது தொடர்பாக என்னுடைய மருமகன் புகார் கொடுத்து அவர்கள் இருவரையும் போலீசார் கூட்டி வந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து மேற்படி இருவரையும் தனியே போகச் சொல்லி எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்தார்கள். அபிறகு என்னுடைய மகள் என்னுடன் தான் இருந்தார். அதன் பிறகு 20 நாட்கள் கழித்து ஒரு நாள் எதிரி எனக்கும் என்னுடைய தம்பிக்கும் என்னுடைய பொண்ணுக்கும் போன் செய்தார். என்னுடைய தம்பி தன்னை வாடா பார்த்துக்கலாம் என்று சொல்லி டார்ச்சர் செய்ததாக என்னுடைய தம்பி என்னிடம் சொன்னார். அதன்பிறகு நானும் என்னுடைய தம்பியும் கச்சேரி வலசுக்கு சென்றோம். அங்கு எதிரி டாக்டர் வீட்டில் இருப்பதாகவும் அங்கு வருமாறு சொன்னதன் பேரில் நாங்கள்

இருவரும் அங்கு சென்றோம்.

2. நாங்கள் சென்றபோது அங்கு எதிரி இருந்தார் அவருடன் நான்கு ஐந்து பேர் இருந்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நாங்கள் சென்றபோது ராக்கி வெறும் மேலுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். எங்களைப் பார்த்தவுடன் இருடா வருகிறேன் என்று சொல்லி வீட்டிற்குள் சென்று சட்டையை போட்டுக்கொண்டு கையில் ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு வந்தார். வெளியே வந்தவர் மேற்படி கத்தியை வைத்து என்னுடைய தம்பியின் வலது அல்லைக்கு கீழ் வயிற்றில் ஒரு குத்து குத்தினார். பிறகு வலது தோள்பட்டையில் ஒரு குத்து குத்தினார். மேலும் என்னுடைய தம்பியின் தொடையிலும் கத்தியால் குத்தினார். குத்தி விட்டு கத்தியை எடுத்துக் கொண்டு ராக்கி அங்கிருந்து ஓடிவிட்டார். நான் என்னுடைய தம்பியை டிவிஎஸ்50–ல் பேருந்து நிறுத்தம் வரை கூட்டிச்சென்று அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் காங்கயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றேன். அங்கிருந்து என்னுடைய தம்பியை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு போக சொல்லி சொன்னார்கள். நான் என்னுடைய தம்பியை ஈரோடு கூட்டி சென்றேன். மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர் எனது தம்பியை பார்த்துவிட்டு பத்து நிமிடங்களுக்கு முன்பு அவர் இறந்து விட்டதாக என்னிடம் சொன்னார். அங்கிருந்து ராமசாமி, தம்பி சந்திரன், அண்ணன் முருகன், ஆகியோருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். என்னுடைய தம்பியின் மனைவி ரதிக்கும் போன் பண்ணி தகவல் சொன்னேன். அனைவரும் மருத்துவமனை வந்து விட்டார்கள். மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்.

3. அன்று இரவு 11:30 மணிக்கு நான் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்றேன். என்னுடன் வந்த எனக்கு தெரிந்த ஒருவரிடம் என்னுடைய தம்பி இறந்தது தொடர்பாக புகார் ஒன்றை எழுதிக் கொடுக்க சொன்னேன். மேற்படி புகாரை நான் போலீசாரிடம் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் மேற்படி புகார் அ.சா.ஆ.1. என்னுடைய தம்பியின் ரத்தம்

என்னுடைய சட்டையில் ஆகி இருந்தது அதை காவல் நிலையத்தில் நான் ஒப்படைத்தேன். அதை போலீசார் கைப்பற்றிக் கொண்டார்கள் படிவம் 91 இல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்னுடன் ராமசாமி என்பவரும் கையெழுத்து செய்துள்ளார் மேற்படி படிவம் 91ல் அ.சா.ஆ.2. மேற்படி என்னிடம் காட்டப்படும் சட்டை நான் அன்று காவல் நிலையத்தில் கொடுத்த என்னுடைய சட்டை ஆகும் அது சா.பொ.1 மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நான் படிக்கவில்லை. எனக்கு தமிழ் பிழையின்றி எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். புகாரை போலீசார் என்னிடம் படித்துக் காட்டினார்கள். போலீசார் விசாரணையின் போது மேற்படி சங்கதியை நான் கூறியுள்ளேன். புகாரை காவல் நிலையத்தின் பின்புறம் திண்ணையில் வைத்து எழுதிக் கொடுத்துவிட்டு அவர் சென்று விட்டார். புகார் கொடுப்பதற்கு அவர் என்னுடன் வரவில்லை. போலீசாரிடம் புகாரை உடன் வந்த ஒருவர் எழுதிக் கொடுத்தார் என்றும் அவர் அங்கிருந்து சென்று விட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளேன். புகாரில் என்னுடைய மகளுக்கும் எதிரிக்கும் எவ்வளவு வருடங்களாக பழக்கம் இருந்தது என்பதை குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி இருவரும் ஓடிப்போன பிறகு தான் அவர்கள் இருவருக்கும் பழக்கம் இருந்த விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். புகாரில் என்னுடைய மகளின் திருமணத்திற்கு முன்பே எதிரியுடன் தொடர்பு இருந்ததா அல்லது திருமணத்திற்கு பிறகு தொடர்பு ஏற்பட்டதா என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் திருமணத்திற்கு பிறகு தான் அவர்களுக்குள் தொடர்பு ஏற்பட்டது. என்னுடைய மகள் எதிரியிடம் சென்றபோது தன்னுடைய இரண்டாவது மகன் யாத்ரா அர்ஜுனன் என்பவரை கூட்டிச் சென்று விட்டார் என்று சொன்னால் சரிதான்.

2. என்னுடைய மகள் எதிரியுடன் சென்ற விபரம் இரண்டு நாட்கள் கழித்து எனக்கு தெரியும். புகாரில் என்னுடைய மகள் எதிரியுடன் சென்று விபரம்

என்னுடைய மருமகன் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மகள் எதிரியுடன் தான் சென்றிருக்கிறார் என்ற விவரத்தை என்னுடைய மருமகனுக்கு யார் சொன்னார் என்ற விவரத்தை நான் புகார் மற்றும் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மகள் காணாமல் போனது தொடர்பாக புகார் கொடுப்பதற்காக என்னுடைய மருமகன் என்னை அழைத்து அதன் அடிப்படையில் நாங்கள் இருவரும் காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு நான் என்னுடைய மருமகன் என்னுடைய தம்பி தங்கராஜ் என்னுடைய மருமகனின் அப்பா மற்றும் இன்னொரு நபர் ஆகியோர் சென்றோம். புகார் கொடுப்பதற்கு என்னுடைய மனைவி என்னுடன் வரவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகள் திரும்ப வந்த பிறகு நான் என்னுடைய மருமகனிடம் இனிமேல் என்னுடைய மகள் அவ்வாறு செல்ல மாட்டார் என்று சமாதானம் செய்த பிறகு என்னுடைய மருமகன் என்னுடைய மகளை அவருடன் கூட்டிச் சென்றார் என்றால் சரிதான். மகளை கூட்டி வந்த அன்றே என்னுடைய மகளை நாங்கள் அழைத்துச் சென்று விட்டோம். எதிரி தனியாக சென்று விட்டார். எதிரியால் என்னுடைய மகளின் வாழ்க்கை பாழாகிவிட்டது என்று எங்களுக்கு கோபம் இருந்தது என்று சொன்னால் சரிதான். புகாரில் தப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் என்னுடைய மகளின் பெயர் சிவன்மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறாக எழுதப்பட்டிருக்கலாம். புகாரில் உள்ள விபரங்களை நான் தெரிவித்து இருந்தால் என்னுடைய மகளின் பெயரை தவறாக சொல்லி இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் என்னால் கொடுக்கப்படவில்லை என்பதால் தான் மேற்படி என்னுடைய மகளின் பெயர் தவறாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3. நான் காவல் நிலையத்தில் வெள்ளைத் தாளில் கையெழுத்து செய்தேன் என்றாலும் அதை பின்னிட்டு போலீசார் எழுதிக் கொண்டார்கள் என்றாலும் சரிதான். அவ்வாறு பிரித்து வைத்ததற்கு பிறகும் என்னுடைய மகளும் எதிரியும்

செல்போனில் பேசிக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய மகள் நாங்கள் சொல்வதைக் கேட்காமல் எதிரியுடன் பேசிக் கொண்டே இருந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய மருமகன் என்னுடைய மகளுக்கு இரண்டாவதாக பிறந்த குழந்தை எதிரிக்கு பிறந்தது என்று சொல்லி கொண்டு இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனவே என் மகளின் வாழ்க்கையில் பிரச்சனையாக இருக்கும் எதிரியை கொல்ல வேண்டும் என்று எங்கள் குடும்பத்தார் முடிவு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை கொள்ள வேண்டும் என்று நானும் என்னுடைய மகனும் என்னுடைய தம்பி என்னுடைய மருமகன் உதயகுமார் மற்றும் இன்னொரு நபர் ஆகியோர் எதிரியின் வீட்டை அவ்வப்போது வேவு பார்த்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் எதிரியும் சொரியன்கிணத்துப் பாளையம் என்ற இடத்தில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். டாக்டர் இருக்கும் ஊரின் பெயர் கச்சேரி வலசாகும். கச்சேரி வலசுக்கும் சொரியன்கிணத்துப்பாளையத்திற்கும் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். நாங்கள் அனைவரும் எதிரியை கொல்வதற்காக அவரது வீட்டை வேவு பார்த்ததால் எதிரி கடத்துப்பாளையத்தில் தங்காமல் கச்சேரிவலசில் மேற்படி டாக்டர் வீட்டில் பயந்து மறைந்து வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரியின் செல்போன் எண் அல்லது என்னுடைய செல்போன் எண் மற்றும் என்னுடைய தம்பியின் செல்போன் எண்ணை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டை நாங்கள்தான் தேடிச் சென்றோம் என்று சொன்னால் அவர் வரச் சொன்னதால் சென்றோம். புகாரிலோ அல்லது விசாரணையிலோ என்னுடைய தம்பியை நான் பார்த்தபோது அவர் வாகனத்தில் வந்தாரா அல்லது நான் வாகனத்தில் வந்தேனா என்றும் அல்லது இருவரும் நடந்து வந்தோமா என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை புகாரியில் நான் குறிப்பிட்டேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக டிவிஎஸ்50 இல்லை அது என்னுடைய தம்பியின்

வாகனமாகும். அது என்னுடைய தம்பியின் சொந்த வண்டியாகும். மேற்படி வாகனத்தில் பதிவுசான்றை போலீசார் எங்களிடம் கேட்டு வாங்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி வாகனம் யாருக்கு சொந்தமானது என்பது குறித்தும் அதனுடைய பதிவு விவரங்கள் குறித்தும் நான் புகாரில் சொல்லாததால் மேற்படி தேதியில் நான் என்னுடைய தம்பியை இரு சக்கர வாகனத்தில் கூட்டிச் சென்றதாக கூறுவது நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தம்பியை கூட்டிச்சென்ற போது இருசக்கர வாகனத்திலும் ரத்தம் வடிந்தது அந்த வாகனத்தை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் மேற்படி தினத்தில் டிவிஎஸ் வாகனத்தில் செல்லவில்லை என்றாலும் மேற்படி டிவிஎஸ் வாகனம் குறித்து போலீசார் வேண்டுமென்றே விசாரிக்க தவறி உள்ளார்கள் என்றாலும் அதற்கு நான் உறுதுணையாக இருந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உதயகுமார், என்னுடைய மகன் கிருஷ்ணன், இறந்து போன தங்கராஜ் என்னுடைய உறவினரான பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர் ஆகியோர் எதிரியை கொல்லும் நோக்குடன் ஆயுதங்களுடன் அவரை தேடிச் சென்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

5. எந்த செல்போன் எண்ணில் இருந்து எதிரி என்னுடைய தம்பியை தொடர்பு கொண்டு பேசினார் என்று போலீஸ் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய மற்றும் என்னுடைய தம்பியின் செல்போன்கள் பட்டன் செல்போன்களாகும். மேற்படி தேதியில் எதிரி எந்த செல்போனை வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் எதிரியின் செல்போனை கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டவாறு எந்த அழைப்புகளும் எதிரியின் செல்போனில் இருந்து என்னுடைய தம்பிக்கோ எனக்கும் வரவில்லை என்றாலும் அதனால் தான் புகாரில் யாருடைய செல்போன் எண்களையும் நான் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடம் என்ன கேட்பதற்காக சென்றோம் என்று புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய செல்போனில் இருந்து எதிரிக்கு பேசி அவருடைய முகவரியை கேட்டேனா

அல்லது என்னுடைய தம்பியின் செல்போனில் இருந்து பேசி முகவரியை கேட்டேனா என்று புகார் மற்றும் போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் தான் எதிரிக்கு கொலை மிரட்டல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அக்கம் பக்கத்தில் விசாரித்து எதிரி இருக்கும் வீட்டை கண்டுபிடித்து அங்கு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி உயிருக்கு பயந்து கொண்டு இருந்த எதிரி எங்களை அவரைப் பார்க்க வரச் சொல்லி சொல்லியிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள டாக்டர் வீட்டில் தான் இருப்பதாகவும் எங்களை வா என்று எதிரி சொன்னதாகவும் நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி டாக்டரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். டாக்டர் பெயரை போலீஸ் விசாரணையிலோ அல்லது புகாரிலோ நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடன் வந்தவர்களுக்கு எதிரி இருந்த முகவரி தெரியும் என்றாலும் டாக்டருடைய பெயர் அவர்களுக்கு தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல.

6. எதிரியை கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் சென்றதால் தான் என்ன காரணத்திற்காக நான் அவரை பார்க்கச் சென்றோம் என்று குறிப்பாக என்னால் சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொரியன் கிணத்துப்பாளையத்திற்கும் பழைய பேருந்து நிறுத்தத்திற்கும் சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சொரியன் கிணத்துப்பாளையத்திற்கும் புது பஸ் ஸ்டாண்டுக்கும் சுமார் 4 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். டாக்டர் வீட்டை யார் யாரை விசாரித்து தெரிந்து கொண்டு அங்கு சென்றோம் என்று என்னுடைய புகாரிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டாக்டர் வீட்டில் டாக்டருடன் சேர்ந்து சுமார் நான்கு பேர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அடையாளமும் தெரியாது. போலீசாரிடம் மேற்படி டாக்டர் வீட்டில் நான்கு பேர் இருந்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நாலு பேரை அழைத்து போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு

தெரியாது என்றால் சரிதான். எதிரி என்னுடைய தம்பியை கத்தி எடுத்து குத்தியதாக கூறப்படும் நேரத்தில் மேற்படி நான்கு பேர்களும் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான் டாக்டருடன் சேர்ந்து ஐந்து பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். தற்போது மேற்படி டாக்டர் மற்றும் அவரது உதவியாளர் சார்லஸ் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய மகன் கிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் சென்றபோது டாக்டர் வீட்டின் கேட் மூடி இருந்தது உள்ளே தாள் போடப்பட்டிருந்தது. உள்ளே தாள் போட்டு விட்டால் வெளியில் இருந்து திறக்க மேற்படி கேட்டை திறக்க முடியாது என்றால் சரிதான். நான் ஐந்து பேரும் குற்றம் புரியும் நோக்கத்துடன் டாக்டர் வீட்டிற்கு சென்று மேற்படி கேட்டில் ஏறி குதித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தம்பிக்கு சம்பவ சமயத்தில் 35 வயது இருக்கும். எதிரிக்கு அப்போது வயது 24 என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எதிரி அப்பொழுது ஒல்லியாக இருப்பார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தம்பி எதிரியின் கழுத்தை இடது கையால் கட்டிப்பிடித்துக் கொண்டு வலது கையால் கத்தியை வைத்துக்கொண்டு அவரை குத்த வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி திமிறிய போது என்னுடைய தம்பி வைத்திருந்த கத்தி தவறுதலாக அவர் மீதே குத்திவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

7. நாங்கள் அனைவரும் ஆயுதங்களுடன் எதிரியை தாக்குவதற்காக வந்தபோது எதிரி தன்னை தற்காத்துக் கொள்ள முயற்சி செய்தபோது மேற்படி கத்தி தவறுதலாக என்னுடைய தம்பியின் மீது குத்திவிட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தம்பிக்கும் எதிரிக்கும் வேறு எந்த தனிப்பட்ட விரோதமும் இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரி என்னையோ என்னுடைய மகனையோ அல்லது மருமகனையோ கொண்றிருந்தால்தான் அவருடைய பிரச்சினை தீரும் என்றாலும் என்னுடைய தம்பியை கொல்வதால் அவருடைய பிரச்சினை தீராது என்று சொன்னால் சரி அல்ல. எதிரிக்கு என்னுடைய தம்பியை கொல்வதற்கு எந்த விதமான உள்நோக்கமும் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது எதிரி சட்டை அணிந்து இருந்தார் என்றால் சரிதான். எதிரியின் பேண்டில் மறைத்து வைத்த கத்தியை வெளியே எடுக்கும் வரையில் அது எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கத்தி என்னுடைய தம்பி கொண்டு வந்தது என்று சொன்னால் சரியல்ல. எதிரி சாதாரண சட்டை அணிந்து இருந்தார். எதிரி இரண்டு பட்டன்களை மட்டும் போட்டுக்கொண்டு சட்டை அணிந்து வந்து விட்டார். எதிரி தன்னுடைய பேண்டின் எந்த பாக்கெட்டில் கத்தியை வைத்திருந்தார் என்று நான் புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான் அவர் எங்கு வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. நாங்களும் எதிரியும் கன்னடம் பேசும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நடந்த உரையாடல்கள் தமிழ் மொழியில் பேசப்பட்டதா? அல்லது கன்னடத்தில் பேசப்பட்டதா என்பது குறித்து நான் போலீசாரிடம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். போனில் பேசும் போதும் நானும் எதிரியும் எந்த மொழியில் பேசினோம் என்று குறிப்பாக புகாரிலோ அல்லது போலீசார் விசாரணையிலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8. மேற்படி சம்பவத்தில் என்னுடைய தம்பிக்கு வயிற்றில் ஒரே ஒரு காயம் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். மற்ற காயங்களும் உயிர் பாதிப்பை ஏற்படுத்தாத காயங்கள் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு என்னுடைய தம்பியை கொலை செய்யும் நோக்கம் இல்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் எதிரி என்னுடைய தம்பியை பலமுறை வயிற்றில் கத்தியால் குத்தியிருக்க வாய்ப்புண்டு என்றாலும் எனவே எதிரிக்கு என்னுடைய தம்பியை கொல்ல வேண்டிய உள்நோக்கம் இல்லை என்பதால் இது கொலை வழக்கல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரியை மருத்துவர் வீட்டில் இருந்த ஐந்து நபர்களோ அல்லது நானோ தடுக்க முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியுடைய உடைகளில் என்னுடைய தம்பியின் ரத்தம் படிந்து விட்டது என்று சொன்னால் அது தெரியவில்லை. சம்பவத்தின் போது லுங்கி

வேட்டி கட்டி இருந்தேன் அதில் ரத்தம் படிந்தது அதையும் போலீசார் வாங்கிக் கொண்டார்கள். அப்போது நான் ஒரு கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். எதிரி ஓடியவுடன் அங்கிருந்த ஐந்து பேரும் ஓடி விட்டார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அங்கிருந்த ஐந்து நபர்களும் என்னுடைய தம்பியை உட்கார வைக்கவோ அல்லது ஆம்புலன்ஸ் அழைக்கவோ உதவி செய்யவில்லை. நான் யாருடைய உதவியும் இல்லாமல் என்னுடைய தம்பியை இருசக்கர வாகனத்தில் வைத்து காங்கேயம் கூட்டி வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய தம்பி கூட்டி வரும்போது ரோடு முழுவதும் அவருடைய ரத்தம் சிந்தி வந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. கேட் திறந்துதான் இருந்தது என்றாலும் நாங்கள் யாரும் அதை தொடாமல் வெளியே வந்து விட்டோம் என்றால் சரிதான். என்னுடைய தம்பி ஒரு துண்டை வைத்து தன்னுடைய காயத்தை அமுக்கிக் கொண்டே இருசக்கர வாகனத்தில் வந்தார். அந்த துண்டையும் போலீசார் வாங்கிக் கொண்டார்கள் அப்போதும் நான் கையெழுத்து செய்தேன். மேற்படி சங்கதியை நான் போலீஸ் விசாரணை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொன்னேன். அது என்னுடைய துண்டு ஆகும் ஆனால் அதை போலீசாரிடம் சொல்லவில்லை.

9. சம்பவம் நடக்கும் போது நான் கேட்டிற்கு உள்ளே நின்று கொண்டிருந்தேன். அப்போது எதிரி என்னுடைய தம்பியை கத்தியால் குத்தி விட்டு ஓடி விட்டார். எதிரி என்னுடைய தம்பியை குத்தியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய தம்பி கத்திக்குத்து காயத்துடன் வெளியே வந்து தன்னை குத்தி விட்டதாக சொன்ன பிறகுதான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி சம்பவத்தில் எதிரிக்கு என்னுடைய தம்பி கத்தியால் குத்தி காயம் ஏற்பட்டது என்று சொன்னால் எதிரி கை உதறும் போது கத்தி பட்டு எதிரியின் இடது கை நடு விரலில் காயம் ஏற்பட்டு விட்டது. என்னுடைய தம்பி தான் எதிரியை குத்த வந்தார் என்றாலும் அதை தடுத்ததால் தான் எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை காங்கயம் அரசு மருத்துவமனையில் போலீசார் சிகிச்சைக்கு சேர்த்து

சிகிச்சை அளித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் என்னுடைய புகாரிலோ அல்லது போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு மூன்று தையல்கள் போடக்கூடிய ஆழமான காயம் ஏற்பட்டது என்று சொன்னால் அது மட்டும் எனக்கு தெரியாது. எதிரி மேற்படி சம்பவத்தை நிகழ்த்தி இருந்தால் கத்தியின் கூர்மையான பகுதியை அவர் கையில் பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அதை தடுத்ததால் தான் அவர் கையில் காயம் ஏற்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. பிரித்து விட்டதற்குப் பிறகும் என்னுடைய மகளும் எதிரியும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்ற விபரத்தை புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வேண்டுமென்றே அதை சொல்லாமல் மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகளுடன் எதிரிக்கு பேசக்கூடிய வாய்ப்பிருக்கும் சூழ்நிலையில் என்னிடமோ அல்லது என்னுடைய தம்பியிடமோ எதிரி பேச வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10. என் மூலமாக என்னுடைய மகளை அனுப்பி வைக்க சொல்லி கேட்க வேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியும் என்னுடைய மகளும் மீண்டும் பேசிக் கொண்டிருந்ததை தெரிந்து கொண்டு அந்த கோபத்தில் எதிரியை நாங்கள் கொலை செய்ய முயற்சி செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. பிரித்துவைத்தற்கு பிறகும் எதிரி என்னுடைய மகளுடன் பேசிக் கொண்டிருப்பதாக போலீசாரிடம் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி எங்களை மிரட்டியது தொடர்பாகவும் போலீசாரிடம் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்காததால் தான் நான் எதிரி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான காரணத்தையும் அதனால் தான் என்னால் குறிப்பிட முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி நாங்கள் சென்ற சமயத்தில் டிவி பார்த்துக் கொண்டிருந்தார் என்று புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிட்டேனா என்றால் இல்லை. எதிரி போர்டிகோவில்

சட்டை போடாமல் பேண்ட் மட்டும் அணிந்து சேரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நாங்கள் வருவது எதிரிக்குத் தெரியாததால் தான் அவர் சட்டையை கூட போடாமல் வெளியே அமர்ந்து இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி நாங்கள் இருவரும் சென்றவுடன் மறைந்திருந்து கத்தியால் என்னுடைய தம்பியை குத்தவில்லை என்றால் சரிதான் வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து குத்தினார். நாங்கள்தான் எதிரியின் வீட்டுக்கு சென்று வினையாற்றினோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எதிர்வினையாற்றியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை அங்கிருந்த ஐந்து பேரை தவிர வேறு யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறிப்பாக டாக்டர் வீட்டில் எந்த இடத்தில் நடந்தது என்று நான் புகாரிலோ, போலீசார் வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் போர்டிகோவில் நடந்தது. என்னுடைய தம்பியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல 108 ஆம்புலன்ஸை அழைப்பதற்கு நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் உள்ளே சென்றது என்னுடைய தம்பி குத்து வாங்கிக்கொண்டு வெளியே வந்தது ஆகியவை ஒரு முக்கால் மணி நேரத்தில் நடந்தது. பேச்சு வார்த்தை நடந்து அது முற்றித்தான் மேற்படி சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

11. புகாரிலோ போலீசார் விசாரணையிலோ என்னுடைய தம்பி கூட்டிக்கொண்டு எக்ஸெல் வாகனத்தில் வெள்ளக்கோயில் புது பேருந்து நிலையத்திற்கு வந்தோமா அல்லது பழைய பேருந்து நிலையத்திற்கு வந்தோமா என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய தம்பியை காங்கேயம் அரசு மருத்துவமனையில் இரவு 9.15 மணிக்கு சேர்த்தேன். ஆம்புலன்ஸ்லேயே நாங்கள் இருவரும் மருத்துவமனைக்கு சென்றோம். டிவிஎஸ் 50 வாகனத்தை என்ன செய்தோம் என்று புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணைக்கு குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அதை அங்கே நிறுத்தி விட்டு சென்று விட்டோம். நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் என்னால் தெளிவான பதிலை சொல்ல முடியவில்லை

என்று சொன்னால் சரியல்ல. காங்கயம் மருத்துவமனையில் வயிற்றில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு பேண்டேஜ் வைத்து ஒட்டி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். சுமார் 9.20 மணிக்கு காங்கேயம் அரசு மருத்துவமனையில் இருந்து ஈரோடு மருத்துவமனைக்கு கிளம்பினோம். காங்கயம் அரசு மருத்துவமனையில் 15 நிமிடம் மருத்துவம் பார்த்தார்கள் உடனே ஈரோடு மருத்துவமனை கிளம்பி விட்டோம். 10.10 மணிக்கு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டோம். ஆம்புலன்சில் சென்றபோது அனைவருக்கும் போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு சென்றேன் அதை போலீசார் விசாரணியில் நான் குறிப்பிட்டுள்ளேன். சுமார் 15 பேருக்கு நான் போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு சென்றேன். புகாரை உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். சம்பவம் இடம் என்ன என்பதை என்னுடைய புகாரிலோ போலீசார் விசாரணையில் குறிப்பிடாமல் தற்போது முதன்முறையாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனபதி வீட்டிற்கு செல்லும்போது அவர் உள்ளே வருவதற்கு அனுமதி பெற்று சென்றோமா அல்லது நேரடியாக சென்று விட்டோமா என்றால் அனுமதி கேட்கவில்லை நேரடியாக சென்று விட்டோம்.

12. குற்றநோக்கத்தோடு நாங்கள் அனைவரும் அங்கு சென்றதால் தான் அனுமதி கேட்காமல் மேற்படி வீட்டுக்குள் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். போர்டிகோவில் ரத்தம் இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். போலீசாரிடம் டாக்டர் வீட்டில் லைட் எரிந்ததா என்ற விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். டாக்டர் வீட்டின் மெயின் கேட் கிழக்கு பார்த்தவாறு உள்ளது. டாக்டர் வீட்டின் இரண்டு பக்கமும் இரண்டு வீடுகள் ஒட்டியவாறு உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தம்பி அணிந்திருந்த உடைகளில் கத்திக்குத்தி ஓட்டை ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான். அவர் அணிந்திருந்த கைலி, டீ சர்ட் மற்றும் உள்ளாடை

ஆகியவற்றில் கத்திக்குத்துப்பட்டு ஓட்டை ஏற்பட்டது. கத்தியின் அடையாளங்கள் எதையும் நான் புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை. நான் கத்தியை பார்க்கவில்லை. எதிரி ஓடிய சமயத்தில் என்னுடைய தம்பி இறக்கவில்லை என்றாலும் உயிரோடு இருந்தார் என்றாலும் சரிதான். டாக்டர் வீட்டில் மேற்படி ஐந்து நபர்களும் எவ்வளவு தூரத்தில் நின்று எந்தெந்த இடத்தில் இருந்து சம்பத்தை பார்த்தார்கள் என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி சம்பவ இடத்திலிருந்து பயந்து ஓடிவிட்டார் என்று சொன்னால் சரிதான். எதிரி 11.05.2017 ஆம் தேதி இரவு 9:00 மணிக்கு திருப்பூர் நல்லூர் காவல் நிலையத்தில் சரணடைந்து விட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அன்றைய தினம் 11 மணிக்கு மேல் வெள்ளகோவில் போலீசார் நல்லூர் காவல் நிலையத்திலிருந்து எதிரியை கூட்டி வந்து விட்டார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் வெள்ளகோவில் காவல் நிலையத்திற்கு வந்தபோது எதிரி மேற்படி காவல் நிலையத்தில் லாக்கப்பில் வைக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. என்னுடைய தம்பி இறந்ததற்கு மறுநாள் காலை 8 மணிக்கு எதிரி வெள்ளகோவில் காவல் நிலையத்தில் இருந்தார். டாக்டர் தனபதி வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்பதை நான் போலீசாரிடம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் பகுதி குடியிருப்பு பகுதி என்றாலும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றாலும் சரிதான். எதிரி ஓடியவுடன் அவரை பிடியுங்கள் பிடியுங்கள் என்று சொல்லி அவரை பிடிக்க நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் என்னுடைய மகளுக்கு வயது 27 என்று சொன்னால் சரிதான். வயது அதிகமான என்னுடைய மகள் வயது குறைவான எதிரியை அவர்தான் கூட்டிச் சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

13. எதிரி தான் தன்னை என்னுடைய மகள் அழைத்துச் சென்று விட்டதாகவும்அவர்கள் இருவரும் சேலத்தில் இருப்பதாகவும் தங்களை வந்து அழைத்துச் செல்லுமாறும் எதிரி தான் என்னுடைய மருமகனிடம் தகவல்

சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகள் சிவன்மதி 11 வது வகுப்பு வரை படித்துள்ளார். எதிரி பி.இ படித்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. சேலத்தில் இருந்து என்னுடைய மகளை அழைத்து வந்தவுடன் அவர் என்னுடைய மருமகனுடன் செல்ல விரும்பாததால் திருப்பூர் மரியாதை இல்லத்தில் 13.04.2017 முதல் 14.04. 2017 வரை தங்க வைக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய மகளுக்கு என்னுடைய மருமகனுடன் வாழ பிடிக்காமல் எதிரியுடன்தான் வாழப் பிடித்திருந்ததால் எங்கள் குடும்பத்தாருக்கு எதிர் மீது கோபம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகன் கிருஷ்ணனுக்கு அப்போது திருமணமாகவில்லை. தற்போது என்னுடைய மகள் தனியாக கூடியிருக்கிறார் என்னுடைய மகன் அவ்வப்போது வந்து சாப்பிட்டு விட்டு செல்வார். நான் குறிப்பாக எந்த வேலைக்கும் செல்லாமல் கிடைக்கும் வேலைக்கு செல்வேன் என்று சொன்னால் சரிதான்.

14. நான் ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து புகார் கொடுப்பதற்காக காரில் வெள்ளகோவில் வந்தோம். நான் வெள்ளகோவில் வந்தபோது மேற்படி ஈரோடு அரசு மருத்துவமனையில் என்னுடைய உறவினர்கள் யாரும் இல்லை. நான் சென்ன விவரங்களை போலீசார் கைகளால் எழுதிக் கொண்டார்கள். போலீசாரிடம் என்னுடைய தம்பிக்கு வலது தோள்பட்டையில் கத்திக்குத்து காயம் இருந்த விவரத்தை சொன்னேன். என்னுடைய தம்பியின் செல் போன் டாக்டர் வீட்டிலேயே விழுந்து விட்டது அதை எடுக்காமல் வந்து விட்டோம். போலீசார் அதை எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் மேற்படி வீட்டை விட்டு வெளியே வந்தபோது அங்கு யாரும் எங்களை என்ன நடந்தது என்று விசாரிக்கவில்லை.மேற்படி சம்பவம் குறித்து முதன்முதலாக காங்கேயம் மருத்துவமனை மருத்துவரிடம் தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகார் எதுவும் என்னால் கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வேறுவிதத்தில் நடந்த இறப்பை எதிரியை பழிவாங்கும் நோக்கில் அவர்

செய்ததாக தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு கையெழுத்து செய்யப்பட்டது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.29 18:58:36 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ரதிமலர் | Calling |
| Husband's Name | : | தங்கராஜ் | Taluk |
| Age | : | | District |
| Village | : | சொரியன்கிணத்துபாளையம் | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 25-10-2025

**முதல் விசாரணை**

வெள்ளக்கோயில் சொரியன்கிணத்துபாளையத்தில் குடியிருக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன தங்கராஜ் என்னுடைய கணவர். சாட்சி சுப்பிரமணி என்னுடைய கணவரின் அண்ணன். எதிரியை தெரியும் அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர். என்னுடைய கணவரின் அண்ணன் மகள் பெயர் சிவன்மதி. அவருக்கும் எதிரிக்கும் தவறான தொடர்பு இருந்தது. அவர்கள் இருவரும்2017 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் ஓடிப்போய்விட்டார்கள். காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து அவர்கள் இருவரையும் பிரித்து கூட்டி வந்தோம். அப்போது எதிரி என்னுடைய கணவருக்கு போன் செய்து தகாத வார்த்தைகளில் திட்டிக் கொண்டிருந்தார். என்னுடைய கணவர் லாரி ஓட்டுனராக இருந்தார் வெளியே சென்று விடுவார். அவர் வீட்டுக்கு வந்திருந்தார் அதை தெரிந்து கொண்டு எதிரி தினமும் அவரை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பேசி வந்தார். 11.05.2017 ஆம் தேதி எதிரிஎன்னுடைய கணவருக்கு போன் செய்து டாக்டர் தனபதி வீட்டிற்குவரச் சொல்லி சொன்னார். இரவு சுமார் 8.00 மணிக்கு மேல்என்னுடைய கணவரும் அவரது அண்ணனும் சென்றிருக்கிறார்கள். சுமார் 8.30 அல்லது 9.00 மணிக்கு எதிரி என்னுடைய கணவரை கத்தியால் குத்தி விட்டதாக அவரது அண்ணன் எனக்கு போன் மூலம்

தகவல் சொன்னார். அதன் பிறகு அவரை ஈரோடு அரசு மருத்துவமனை கொண்டு போய் இருப்பதாக சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது என்னுடைய கணவர் இறந்திருந்தார். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி என் கணவரிடம் பேசியபோது மேற்படி போனை நானும் வாங்கி அவரிடம் பேசி உள்ளேன். போலீசாரிடம் அதை நான் குறிப்பிடவில்லை. எதிரியை இந்த வழக்கில் குற்றம் சாட்டுவதற்காக மேற்படி சங்கதிதியை நான் பின் யோசனையாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. செல்போன் பேசியபோது இவர் தான் பேசுகிறார் என்று உறுதியாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் என்னுடைய கணவருக்கும் எந்த விதமான தனிப்பட்ட விரோதமும் இல்லை என்று சொன்னால் சரிதான் எதிரிக்கும் என்னுடைய கணவரின் அண்ணன் அவரது மகன் மற்றும் அவரது மருமகனுக்கும் தான் பிரச்சனை இருந்தது என்று சொன்னால் சரிதான். என்னுடைய கணவரின் அண்ணனின் தூண்டுதலின் பேரில் என்னுடைய கணவரும் மற்றும் உதயகுமார் கிருஷ்ணன் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத ஒரு நபரும் எதிரியை கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அவரை தேடிச் சென்றார்கள் என்றும் அப்போது ஏற்பட்ட கைகலப்பில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக என்னுடைய கணவர் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் சுப்பிரமணி சொல்லித்தான் தெரியும் என்று சொன்னாலும் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு கையெழுத்து செய்யப்பட்டது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.29 18:58:46 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.